செ.வெ.எண். 83 நாள்.30.09.2020

## பத்திரிகை செய்தி

**கடலூர் மாவட்ட கூட்டுறவுத்துறையின் சார்பில்**
**களையூர் – இரண்டாயிர விளாகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவில்**
**ரூ.4.39 கோடி மதிப்பிலான புதிய கட்டடங்கள், கிடங்குகள், 2 அம்மா மருந்தகங்கள் மற்றும் 72 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளை திறந்து வைத்து**
**11,617 பயனாளிகளுக்கு ரூ.105.86 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் ஆகியோர் வழங்கினர்.**

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் ஆகியோர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் முனைவர் இல சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் திரு. சந்திரசேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (30.09.2020) கடலூர் மாவட்டம், களையூர்–இரண்டாயிர விளாகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவில், ரூ.4.39 கோடி மதிப்பிலான புதிய கட்டிடங்கள், கிடங்குகள், 2 அம்மா மருந்தங்கள் மற்றும் 72 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளையும் திறந்துவைத்தனர்.

தொடர்ந்து கூட்டுறவுத்துறையின் சார்பில் 7,715 விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக ரூ.5,012 இலட்சமும், 2,626 மகளிருக்கு மகளிர் சுய உதவிக் குழுக் கடனாக ரூ.634.90 இலட்சமும், 22 நபர்களுக்கு கோவிட்–19 கடனுதவியாக ரூ.1.10 இலட்சமும், 139 பயனாளிகளுக்கு சிறு வணிகக் கடனாக ரூ.58 இலட்சமும், 95 பயனாளிகளுக்கு மத்தியகாலக் கடனாக (கறவை மாடு) ரூ.80 இலட்சமும், மத்தியகாலக் கடனாக (டிராக்டர்) 17 நபர்களுக்கு ரூ.117.96 இலட்சமும். 30 மாற்றுத்திறனாளிகளுக்கு கடனாக ரூ.13 இலட்சம் உட்பட பல்வேறு கடனுதவிகள் மொத்தம் 11,617 பயனாளிகளுக்கு ரூ.105.86 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினர்.

**இவ்விழாவில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் பேசியதாவது.**

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உயர்த்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை விரைவாக எடுத்து நம் மாநிலத்திற்குள் நோய் பரவலை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்.

ஊரடங்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், முதல்கட்டமாக, மாநிலம் முழுவதும் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000 மும், அதனைத் தொடர்ந்து, முழு ஊரடங்கு நீட்டிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டங்களில் சில பகுதிகளில் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 2ஆம் கட்டமாக தலா ரூ.1000மும் வழங்கினார். மேலும், ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2020 வரையிலான ஊரடங்கு காலத்தில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றை விலையில்லாமல் வழங்கினார். இது மட்டுமின்றி அனைத்து குடும்பங்களிலும் இணைக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் விலையின்றி மறுமுறை உபயோகிக்கத் தகுந்த தலா 2 முகக் கவசங்களும் வழங்கும் பணி நடைபெற்றுவருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டு மகளிர் பொருளாதார மேம்பாடடைய வழிவகுக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அம்மா அவர்களின் ஆட்சியில் கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவே விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பெண்களின் சிரமத்தினை குறைத்திட, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கப்பட்டது. தமிழக கூட்டுறவுத்துறை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான்

புதுப்பொலிவு பெற்றுள்ளது. தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அளவில் கூட்டுறவுத்துறையின் மூலம் 2011 முதல் 22.09.2020 வரை 98 லட்சத்து, 65 ஆயிரத்து 916 விவசாயிகளுக்கு ரூ. 54,304 கோடியும், நடப்பாண்டில் 22.09.2020 வரை 4,04,882 விவசாயிகளுக்கு ரூ.3,161 கோடியும் வட்டியில்லா விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடலூர் மண்டலத்தில் 2011 முதல் 22.09.2020 வரை 5,96,424 விவசாயிகளுக்கு ரூ.3,000 கோடி பயிர்க் கடனும், நடப்பாண்டில் 22.09.2020 வரை 26,090 விவசாயிகளுக்கு ரூ.182 கோடி வட்டியில்லா விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அளவில் பயிர்காப்பீடு இழப்பீடாக 31.08.2020 வரை 48,84,802 விவசாயிகளுக்கு, ரூ.8,815 கோடியும், இதில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 24,46,578 விவசாயிகளுக்கு ரூ.5,480 கோடியும், குறிப்பாக, கடலூர் மாவட்டத்தில், 1,15,944 விவசாயிகளுக்கு ரூ.139 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் 5,17,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,044 கிடங்குகள் ரூ.533.78 கோடி மதிப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மாற்றுத்திறனாளிகள் கடனாக, தமிழகம் முழுவதும் 2011 முதல் 31.08.2020 வரை 65,229 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.271 கோடியும், கடலூர் மாவட்டத்தில், 1,654 நபர்களுக்கு ரூ.6 கோடியும், நகைக்கடனாக, தமிழகம் முழுவதும், 6,37,07,334 நபர்களுக்கு ரூ.2,50,724 கோடியும், கடலூர் மாவட்டத்தில், 17,97,125 நபர்களுக்கு ரூ. 6,465 கோடியும், தானிய ஈட்டுக் கடனாக தமிழகம் முழுவதும் 2,09,989 நபர்களுக்கு ரூ.2,810 கோடியும், இதில் கடலூர் மாவட்டத்தில் 4,014 நபர்களுக்கு ரூ.66 கோடியும், தமிழகம் முழுவதும், சிறுவணிகக் கடனாக 16,21,814 நபர்களுக்கு ரூ.2,094 கோடியும், கடலூர் மாவட்டத்தில், 34,174 நபர்களுக்கு ரூ.54 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. சிறுவணிகக் கடன் 10.09.2019 முதல் ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு 15.09.2020 வரை மாநில அளவில் 47,512 நபர்களுக்கு ரூ.142 கோடியும், கடலூர் மாவட்டத்தில் 15.09.2020 வரை 1,220 நபர்களுக்கு ரூ.3 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 7 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன இதில் 103 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். கூட்டுறவுத்துறையின் மூலம் 2011–2012 முதல் 31.08.2020 வரை 4,12,223 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.7,338 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், கடலூர் மாவட்டத்தில் 2,51,394 உறுப்பினர்களுக்கு ரூ. 204 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட் –19 சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் அவசரத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கடன் உதவிகள் வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு உறுப்பினருக்கு குறைந்தது ரூ.5 ஆயிரமும் அதிகபட்சமாக ஒரு குழுவிற்கு ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. ஏற்கனவே பெற்றுள்ள கடனில் நிலுவைத் தொகை மற்றும் தற்போது பெறப்படும் தொகையும் சேர்த்து ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். கடனை திரும்ப செலுத்தும் காலம் 24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையாகும். முதல் 6 மாதங்களுக்கு கடனை திரும்ப செலுத்த தேவையில்லை. 6 மாதம் கழித்து சம தவணைகளில் திரும்ப செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 08.05.2020 முதல் 15.09.2020 வரை 14,398 குழுக்களுக்கு ரூ.114.22 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் 31.3.2011 அன்று ரூ.26,245.17 கோடியாக இருந்த வைப்புத்தொகை தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், 31.08.2020 அன்று ரூ.59,376.77 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகம் முழுவதும் 2011 முதல் 31.08.2020 வரை அனைத்து வகைக் கடன்களாக 7,73,83,614 நபர்களுக்கு ரூ. 3,90,641.45 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் 31.08.2020 வரை 6.47 லட்சம் ருபே விவசாய கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் 31.08.2020 வரை 7,487 ருபே பற்று அட்டைகள் மற்றும் 53,064 ருபே விவசாய கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 5,853 சங்கங்கள் ரூ.189.51 கோடி மதிப்பில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தமிழகம் முழுவதும் 752 சங்கங்கள் ரூ.91.63 கோடி மதிப்பிலும், கடலூர் மாவட்டத்தில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 12 கிளைகள், 8 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடங்கள் ரூ.2 கோடி மதிப்பிலும் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மாநில அளவில், ரூ.124.93 கோடி மதிப்பில் 492 புதிய அலுவலகக் கட்டடங்களும், கடலூர் மாவட்டத்தில், மத்தியக் கூட்டுறவு வங்கியின் 5 கிளை மற்றும் 43 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க கட்டடங்கள் ரூ.12 கோடி

மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. மாநில அளவில், ரூ.16.60 கோடி மதிப்பில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 133 கிளைகளும், கடலூர் மாவட்டத்தில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 5 கிளைகளும் துவக்கப்பட்டுள்ளன.

ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுறவுத்துறையின் சார்பில் இயங்கி வரும் 291 அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 20% தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும், ரூ.1,026.07 கோடி அளவிற்கும், இதில் கடலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 5 அம்மா மருந்தகங்கள் மற்றும் 5 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.13 கோடி அளவிற்கும் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படும் 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 27.09.2020 வரை 58,841 மெட்ரிக் டன் அளவிலான காய்கறிகள், ரூ.175 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கொரோனா காலத்தில் தமிழகம் முழுவதும், இயங்கிவரும் நடமாடும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் ஏற்கனவே செயல்பட்டு வரும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 29.03.2020 முதல் 27.09.2020 வரை 6,973 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.19 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் ஊரடங்கு காலத்தில் ரூ.500 மதிப்புடைய, 10 இலட்சம் மளிகை தொகுப்பு பைகள், ரூ.50 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 2011 முதல் 31.08.2020 வரை 678 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 1,767 பகுதிநேர கடைகளும் என மொத்தம் 2,445 புதிய கடைகள் திறக்கப்பட்டுள்ளன, மாநிலம் முழுவதும் 1,232 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கும், 744 பகுதிநேர கடைகளுக்கும் என மொத்தம் 1,976 கடைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக் கடைகளுக்கு அருகிலேயே அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 5% வரை தள்ளுபடி விலையில் 300 வகையான பொருட்களை பெற்றுக்கொள்ளும் வகையில் அம்மா சிறு கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் துவங்க மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டு நாளது தேதி வரை மாநில அளவில் 813 கடைகளும், கடலூர் மாவட்டத்தில் இதுவரை 22 கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110ன் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை கருத்தில்கொண்டு, குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில், 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளை துவக்க உத்தரவிடப்பட்டு, 21/09/2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் 72 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் இன்று (30/09/2020) தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

**இவ்விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பேசியதாவது.**

கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான காப்பீடு, கடனுதவிகள் போன்றவற்றை உடனுக்குடன் வழங்கி விரைந்து செயல்பட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. தமிழக அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை கொரோனா வைரஸ் தொற்று பரவல் காலத்தில் கூட்டுறவுத்துறை மூலம் மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் அனைத்து பொது இடங்கள் மற்றும் பணியிடங்களிலும் பிறரிடங்களில் பயணிக்கும்போது பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நியாயவிலைக்கடைகளில் தரமான மறுபயன்பாட்டு முகக்கவசங்கள் விநியோகிக்கப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில் கடலூர் மாவட்டத்திலுள்ள 1420 நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் பெறும் 7,29,949 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 2 முகக்கவசங்கள் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கொரோனா ஊரடங்கு காலத்தில் 19 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய 45 ஆயிரம் மளிகை தொகுப்பு பைகள் குறைந்த விலையில் நியாயவிலைக்கடைகள் மூலம் ரூ.203 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடலூர் மண்டலத்தில் 176 குழுவிலுள்ள 2,794 உறுப்பினர்களுக்கு ரூ.1.39 கோடி கோவிட்–19 கடன் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இவ்விழாவில், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.முருகுமாறன், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.பாண்டியன், சிறப்புப்பணி அலுவலர் முனைவர் க.ராஜேந்திரன், கூடுதல் பதிவாளர்கள் திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர், திரு.கு.ரவிக்குமார், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.வே.நந்தகுமார், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.சொ.இளஞ்செல்வி, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.தெய்வபக்கிரி, திருப்பணாம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ஜெயபாரதி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர்கள் திரு.வே.திருவேங்கடம், திரு.ந.வெங்கடநரசிம்மன், திரு.இரா.பிரபாகரன், துணைப்பதிவாளர்கள் திரு.ஜெ.சண்முகம், திரு.கோ.நடராஜன் (பணியாளர் அலுவலர்), திரு.வே.துரைசாமி, திரு.மு.ஜெகத்ரட்சகன் (பொதுவிநியோகத்திட்டம்), திரு.என்.ஜீவானந்தம், திரு.பி.ராஜேந்திரன் (முதன்மை வருவாய் அலுவலர்) மற்றும் கூட்டுறவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் அவர்கள் கடலூர் மண்டல கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.